<u>DEPOSITON OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.115/2023 |
| | |
| Deposition of Witness | { PW.9 |
| | { Prosecution |
| | { |
| Name | : ஸ்ரீதர் |
| Father's Name | : --- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.03.2025.

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.9 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புள்ளாகவுண்டம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.04.2018 ம் தேதி தேவூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்த போது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.58/2017 வழக்கில் எதிரியை பிடித்து வைத்திருப்பதாகவும், அவரை விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளர் அன்று மாலை 04.15 மணிக்கு கொடுத்த

தகவலின் பேரில் நானும் என்னுடைய உதவியாளர் செல்வராஜ் என்பவரும் மயிலம்பட்டி பேருந்து நிறுத்தம் சென்றோம். அன்று மாலை 04.30 மணிக்கு கருப்பண்ணன், த/பெ.குஞ்சப்பன் என்பவரை சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளர் எந்த வித அச்சுறுத்தலோ, ஆசை வார்த்தோயோ இன்றி விசாரணை செய்யும் போது அவர் தானாக முன் வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியும் நாங்களும் காவல் ஆய்வாளர் அழைத்து சென்றதன் பேரில் எதிரியின் வீட்டிற்கு பின்புறம் சென்று அங்கு எதிரி கருப்பண்ணன் எடுத்து ஆஜர் செய்த அருவாளை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அப்போது நேரம் மாலை 06.45 இருக்கும். பின்பு ஆய்வாளர் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், உதவியாளர் செல்ராஜ்-ம் சாட்சி கையொப்பம் செய்தோம். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட அருவாள் சா.பொ.1 தான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.2. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்திலும், அதே இடத்தில் வைத்து நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சா.பொ.1 கைப்பற்றப்பட்ட இடமான எதிரி கருப்பண்ணன் வீடு அரசிராமணி கிராமத்திலுள்ளது. மேற்படி அரசிராமணி கிராமம் பிட்-1 க்கு தனியாக கிராம நிர்வாக அலுவலர் உள்ளார் என்றால் சரிதான். சா.பொ.1 கைப்பற்றப்பட்ட இடத்தில் எதிரிகள் வீட்டை தவிர எத்தனை வீடுகள் உள்ளது என்றால் நான் வீட்டை எண்ணிப் பார்க்கவில்லை. எதிரியின் வீடு மெத்தை வீடு. ஓட்டு வீடு தான் என்றால் சரியல்ல. தேவூரிலிருந்து எத்தனை கி.மீ தொலைவில் எதிரியின் வீடு உள்ளது என்றால் எனக்கு துல்லியமாக தெரியாது. தேவூரிலிருந்து எதிரியின் வீடு வடக்கிலுள்ளது. எதிரி கருப்பண்ணனை நான் பார்க்கும் போது நேரம் மாலை சரியாக 04.30 மணி. மேற்படி

தேதி மற்றும் நேரத்தில் எதிரி கருப்பண்ணன் குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சா.பொ.1 கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்காக அனைத்து ஆவணங்களிலும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி அலுவல் சம்பந்தமாக நான் எனது நாட்குறிப்பில் குறித்து வைத்துள்ளேனா என்றால் அந்த வழக்கம் தற்போது நடைமுறையில் இல்லை.

Sd/-ஸ்ரீதர்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.